RNI-N0: TNTAM/2021/83936




# மாலை தந்தி MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

www.malaithanthi.in

DAILY EVENING

மாலை நாளிதழ்

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 229 | ஆகஸ்டு 24, 2026 திங்கள்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

# உலகை ஈர்க்கும் சூழல் இந்திய விண்வெளி துறைக்குத் தேவை: பிரதமர் மோடி



புது டெல்லி: ஆக.24-

விண்வெளித் துறையின் ஸ்டார்ட்அப் நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளுடனான கலந்துரையாடலின் போது, விண்வெளித் துறை ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் அரசின் மீது நம்பிக்கை வைத்துள்ளதாக பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

20 விண்வெளித் துறை ஸ்டார்ட்-அப் நிறுவனங்களின் தலைமை அதிகாரிகள் மற்றும் நிறுவனர்களுடனான உரையாடலின் போது பேசிய பிரதமர் மோடி, 'ஒரு புதிய துறையில் நீங்கள் துணிச்சலை வெளிப்படுத்தியுள்ளீர்கள். மிக முக்கியமான விஷயம் என்னவென்றால், நீங்கள் அரசாங்கத்தின் மீது நம்பிக்கை வைத்துள்ளீர்கள். நாம் எடுக்கும் முடிவுகள் எதுவாக இருந்தாலும், அதில் நிலைத்தன்மை இருக்க வேண்டும் என்பதே எப்போதும் எனது நிலைப்பாடு.

அவற்றை நாம் அடிக்கடி மாற்றிக்கொண்டிருக்கக் கூடாது; அப்போதுதான், புதிய முயற்சி எடுக்க முன்வருபவர்கள் ஒருவித உறுதியை உணர முடியும். அதாவது, தங்கள் சொந்தத் தவறால் ஏதேனும் தவறு நடந்தால் அது வேறு விஷயம், ஆனால் யாரும் அவர்களைக் கைவிடமாட்டார்கள் என்ற நம்பிக்கை அவர்களுக்கு இருக்கும். அந்த நம்பிக்கையைத்தான் நாங்கள் உருவாக்க முயற்சிக்கிறோம்.

இந்தத் துறையில் தங்கள் வாழ்க்கையை உருவாக்க விரும்பும் உலகம் முழுவதிலும் உள்ளவர்கள், இந்தியாவிற்கு வந்து ஒரு இந்திய ஸ்டார்ட்-அப் நிறுவனத்திலோ அல்லது இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனத்திலோ (ISRO) இணைய வேண்டும் என்று நினைக்கும் வகையிலான ஒரு சூழலை நாம் உருவாக்க வேண்டும்.

காந்தம் போல இந்தத் திறமையாளர்கள் அனைவரையும் நம்மால் ஈர்க்க முடியும் என்றும், அது நமக்கு ஒரு மிகப்பெரிய பலமாக அமையும் என்றும் நான் உறுதியாக நம்புகிறேன். செலவு அடிப்படையில் நாங்கள் மிகவும் போட்டித்தன்மை வாய்ந்தவர்களாக இருக்கிறோம். நம் திறமையில் எந்தச் சந்தேகமும் இல்லை. மேலும், நம் நாட்டு மக்களிடம் இயல்பாகவே இடர் ஏற்கும் திறன் அதிகமாக இருப்பதால், இத்துறையில் நமக்கென ஒரு தனித்துவமான இடத்தை விரைவாக உருவாக்கிக்கொள்ள முடியும்.

விண்வெளித் துறை நிறுவனங்களுக்கும் பிற துறைகளைச் சேர்ந்த நிறுவனங்களுக்கும் இடையே அதிக அளவிலான ஒத்துழைப்பு இருக்க வேண்டும். விண்வெளி குப்பைகளை அகற்றுவது தொடர்பான பணிகளில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் சுற்றுச்சூழல் அமைப்புகளுடன் இணைந்து செயல்படலாம்.

விண்வெளி தொழில்நுட்ப நிறுவனங்கள் வேளாண் பல்கலைக்கழகங்கள் மற்றும் வேளாண் துறைகளுடன் இணைந்து விவசாயிகளுக்குச் சிறந்த முடிவுகளை எடுக்கவும் விளைச்சலை அதிகரிக்கவும் உதவலாம்" என்றார்.

## "ஏன் நாங்க கோட்-சூட் போடக்கூடாதா? ஆங்கிலத்தில் பேசக்கூடாதா?" - கொதிக்கும் அமைச்சர் கீர்த்தனா



சிவகாசி. ஆக.24-

சிவகாசியில் தவெக 100 நாள் சாதனை விளக்கப் பொதுக்கூட்டம் (ஆகஸ்ட். 23)அன்று நடைபெற்றது.

இதில் கலந்துகொண்டு பேசிய அமைச்சர் கீர்த்தனா, "100 நாள் ஆட்சியில் வரலாற்றில் யாரும் செய்யாத வகையில் ஊழலற்ற ஆட்சியை வழங்கியிருக்கிறார்.

எந்த முதல்வராவது மேடையில் ஏறி நின்று, 'இனிமேல் ஊழல் நடைபெறாது. ஊழல் நடந்தால் என்னிடம் வந்து சொல்லுங்கள்' என்று தைரியமாகச் சொல்வார்களா?

அரசியல் மிகவும் கொடூரமாக உள்ளது. சட்ட மன்றத்தில் அவர்களது ஃபைலை ஓபன் செய்யவா என்று கேட்டால், ஓபன் செய்யச் சொல்கிறார்கள்.

ஓபன் செய்தால், அவர்கள் சிங்கப்பூரிலோ, துபாயிலோ போய் இருப்பார்கள் என்பது தெரியும். சட்டமன்றத்தில் நேரலை நடக்கக்கூடாது என்று எதிர்க்கட்சியினர் கதறி அழுகிறார்கள்.

'ஐயய்யோ, எதற்காக நேரலை போடுகிறீர்கள்? வார்த்தையை நீக்குகிறோம் என்று மட்டும்தானே சொல்கிறீர்கள்? ஆனால் அவர்கள் ரீல்ஸ் எடுத்து பயர் விடுகிறார்கள்' என்று அழு அழு என்று அழுது புலம்புகிறார்கள்.

ஏனென்றால், 2021-இல் அவர்களும் வாக்குறுதிகள் கொடுத்திருந்தார்கள். ஆனால் இன்று வரை அதை நிறைவேற்றவே இல்லை. இன்று அவர்களின் முகத்திரையை நாம் கிழித்துக் காண்பிக்கிறோம் அல்லவா, அது அவர்களுக்குப் பயமாக இருக்கிறது.

'ஐயய்யோ, மொத்த கட்சியையும் இவர்கள் எல்லோரும் சேர்ந்து அழித்து விடுவார்களோ' என்று பயப்ப டுகிறார்கள். சட்ட சபையில் உட்கார்ந்து நம்மைப் பார்த்து க்கொண்டே இருக்கிறார்கள். 'எப்படி இவர்கள் எல்லாம் வந்தார்கள்? ஒன்றுமே புரியவில்லையே' என்று நினைக்கிறார்கள்.

அவர்களைப் பார்த்து நாம் 'இவர்களுக்கு மக்கள் எப்படி இவ்வளவு நாள் ஓட்டு போட்டார்கள்?' என்று நினைப்போம். அவர்களின் பண்ணையார் புத்தியும், குறுநில மன்னர் புத்தியும் போகவே இல்லை.

'சாமானியர்கள் எல்லாம் எப்படி சட்ட சபைக்குள் வந்தார்கள்?' என்று இன்னும் அவர்களுக்குள்ளே வயித்தெ ரிச்சல் எரிந்து கொண்டே இருக்கிறது. என்னைப் பற்றி நிறைய விமர்சனங்கள் வந்தன. இதற்கு எப்போது ஒரு மேடை கிடைக்கும் என்று நான் பார்த்துக்கொண்டே இருந்தேன்.

ஒரு பெண்மணியாக இருந்தால் அரசியலுக்கு வரக்கூடாதா? ஏன், வந்தாள் கோட்-சூட் போடக்கூடாதா? ஏன் நாங்கள் எல்லாம் ஆங்கிலத்தில் பேசக்கூடாதா? அப்ப டித்தான் போடுவோம்.

ஏன், பண்ணையார்களுக்கும் குறுநில மன்னர்களுக்கும் மட்டும்தான் எழுதி வைக்கப்பட்டிருக்கிறதா கோட் போட வேண்டும் என்று? சாதாரண மக்களாகிய நாங்களும் டை போடுவோம், ஷூ போடுவோம். அதைப் பார்த்துவிட்டு உங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

'ரீல்ஸ் போடுகிறார்கள், ரீல்ஸ் போடுகிறார்கள்... ரீல்ஸ் போட்டே ஆட்சிக்கு வந்துவிட்டார்கள்' என்று புலம்பித் தவித்து, தினமும் என்னைப் பற்றி ஏதாவது ஒன்றைச் சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள்" என்று பேசியிருக்கிறார்.

## "ஓபிஎஸ் என்றால் விசுவாசம்" - அரசியல் வட்டாரத்தில் சுவாரஸ்ய விவாதம்!

சென்னை, ஆக.24-

முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தின் அரசியல் நகர்வுகள் மற்றும் அவரது விசுவாசம் குறித்த செய்திகள் தமிழக அரசியலில் மீண்டும் கவனத்தைப் பெற்றுள்ளன.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் நம்பிக்கைக்குரியவராக விளங்கிய ஓ.பன்னீர்செல்வம், அதிமுகவில் இருந்த காலத்தில் அவரது கட்டளைகளுக்குக் கட்டுப்பட்டு விசுவாசத்துடன் செய ல்பட்டவர் எனப் பெயர் பெற்றவர்.

தற்போது திமுகவுடனான அரசியல் இணக்கத்தில் அவர் பயணித்து வரும் நிலையில், அவரது மகன் ரவீந்திரநாத் தவெகவில் இணைய வேண்டும் என்ற அழுத்தங்களையும், அமைச்சர் பதவி குறித்த தூண்டுதல்களையும் ஏற்க மறுத்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பதவிகள் உடனடியாகக் கிடைக்காத நிலையிலும் மௌனம் காத்து வரும் ஓ.பன்னீர்செல்வம், சட்ட ப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினுக்கு உரிய மரியாதை அளிக்க வேண்டும் என்று பேசியது, அவர் தான் சார்ந்த தலைமையின் மீது வைத்துள்ள விசுவாசத்தை மீண்டும் நிரூபிப்பதாக அரசியல் விமர்சகர்கள் கருத்து தெரிவிக்கின்றனர்.

## "அப்பா-வ காணோம் என்பதை போல, மகனையும் தேட வைத்துவிடாதீர்கள்" - மாஜி அமைச்சர் வைகைச் செல்வன் விமர்சனம்

தஞ்சாவூர், ஆக.24-

இந்த தேர்தலில் அப்பா-வ காணோம் என்பது போல, அடுத்த தேர்தலில் மகனையும் காணோம் என தேட வைத்துவிடாதீர்கள் என்று முன்னாள் அமைச்சரும், தவெகவின் முதன்மை செய்தி தொடர்பாளருமான வைகைச் செல்வன் விமர்சித்துள்ளார்.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணத்தில் தவெகவின் '100 நாள் ஆட்சி ஒரு யுகத்திற்கான மக்களின் மனசாட்சி' எனும் தலைப்பில் தவெக சிறப்பு பொதுக்கூட்டம் சனிக்கிழமை (ஆக.22) இரவு நடைபெற்றது.

தவெக மாவட்ட கழக பொருளாளர் விஜய் சந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், தவெக மாநில வலைத்தள செய்தி தொடர்பாளர் தமிழன் ராகுல் காந்தி மற்றும் முன்னாள் அமைச்சரும், தவெக முதன்மை செய்தி தொடர்பாளருமான வைகைச் செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் பேசிய வைகைச் செல்வன், "தவெகவின் 100 நாள் ஆட்சியிலேயே, திமுகவுக்கு நடுக்கம் ஏற்பட்டு விட்டது. வெந்ததைத் தின்று வாயில் வந்ததை பேசியதற்காக எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினை காவல்துறையினர் விசாரணைக்கு அழைத்த போது, அவரது தாத்தாவைப் போல 3 மணி நேரம் பாத்ரூமில் பதுங்கி இருந்தார். இதுதான் இவர்களது குடும்ப பண்பாடு, குடும்ப வீரம்" என நையாண்டியாக பேசினார்.

மேலும், "சட்ட மன்றத்தில் எதி ர்க்கட்சித் தலைவராக மக்கள் அமரவைத்துள்ளனர். அதோடு நிறுத்தி க்கொள்ளுங்கள். இப்போது அப்பாவை காணோம் என தேடிக்கொண்டி ருக்கிறார்கள். அடுத்த




சட்டமன்றத் தேர்தலில் மகனையும் காணோம் என தேட வைத்துவிடாத்தீர்கள்.

முதலமைச்சராக இருந்த மு.க.ஸ்டாலின், கொளத்தூர் தொகுதியில் தோல்வியடைந்தது கேவலம் இல்லையா? ஓட்டுக்கு ரூ.2 ஆயிரம், 3 ஆயிரம் கொடுத்தும், அண்டா குண்டா கொடுத்தும் வெற்றி பெற்று விடலாம் என்ற கொள்கையை கொண்ட திமுகவுக்கு படுதோல்வி கிடைத்தது.

அதே போல, தேர்தலில் அதிமுக மூன்றாவது இடத்திற்கு தள்ளப்பட்டது. பல தொகுதிகளில் டெபாசிட் தொகையை இழந்தது. விஜய் வருகைக்குப் பிறகு திராவிட கட்சி ஒன்று காணாமல் போகும் என்ற கணக்கு தப்பவில்லை. அது அதிமுகதான்.

தவெகவின் வரலாறு காணாத வெற்றியால், கடுமையாக பாதிக்கப்பட்ட திமுக, இன்று 60 வயதானவர்களை அடக்கம் செய்து, 70 வயதானவர்களை அறிவாலயத்தின் பின்புறமாக போகச் செய்து, 80 வயதானவர்களை நீங்களே போறீங்களா? இல்லை உங்களை அடித்துதான் விரட்டவேண்டுமா? என செயற்குழு கூட்டத்தில் அறிவிப்பு வெளியிட்டுள்ளது" என கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர், "தவெக கூட்ட தொடக்கத்தில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடுவதைப்போல இதுவரை எந்த அரசியல் கட்சியும் செய்ததில்லை. குறிப்பாக, தமிழ்த்தாய் வாழ்த்தை மூன்றாம் இடத்திற்கு தள்ளிவிட்டீர்கள் என கூறும் திமுக கூட இதனை செய்ததில்லை.

கடந்த காலங்களில் நெடுஞ்சாலை, பொதுப்பணி, நீர்வளம் போன்ற துறைகளில் ஒப்பந்ததாரர்கள் பணப்பெட்டியுடன் அமைச்சர் வீட்டில் காத்திருந்தார்கள். அப்படி தற்போதைய தவெக ஆட்சியில், எந்த அமைச்சர் வீட்டிலாவது ஒப்பந்ததாரர்கள் பணப்பெ ட்டியுடன் காத்திரு க்கிறார்கள் எனக் குற்றஞ்சாட்ட முடியுமா?

முதலமைச்சர் விஜய்க்கு பொய் சொல்லவே தெரியாது. தமிழக முதலமைச்சர் விஜய் ஒரு பொய் கூட சொல்ல மாட்டார். எம்.ஜி.ஆரை போன்று மக்களின் அசைக்க முடியாத செல்வாக்கை அவர் பெற்றுள்ளார்" என்றார்.

இதில், தஞ்சை கிழக்கு மாவட்டச் செயலாளரும், கும்பகோணம் எல்எல்ஏவும், தமிழக வேளாண் மற்றும் உழவர் நலத்துறை அமைச்சருமான வினோத், பணிக் காரணமாக பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## சட்டமன்றத்தை சந்தை கடையாக திமுகவினர் மாற்றுகிறார்கள் - அமைச்சர் ரமேஷ்

திருச்சி, ஆக.24-

திமுகவினர் சட்டமன்றத்தை சந்தை கடையை போல் மாற்றி வருகின்றனர் என அமைச்சர் ரமேஷ் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

திருச்சி சர்வதேச விமான நிலையத்தில் தமிழ்நாடு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் ரமேஷ் இன்று (ஆகஸ்ட் 23) செய்தியாளர்களைச் சந்தித்தார்.

அப்போது அவர் பேசியதாவது, "ரேஷன் அரிசி தான் சாப்பிடுகிறேன் என சட்டமன்ற உறுப்பினர் கே.என்.நேரு கூறியது மகிழ்ச்சியாக இருந்தாலும், பல இடங்களில் பொதுமக்கள் ரேஷன் அரிசியை பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கிறது என்ற குற்றச்சாட்டு உள்ளது. அதையெல்லாம் சரி செய்து தரமான பொருட்களை வழங்க முதலமைச்சர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

ஜனநாயக முறைப்படி நடைபெறும் சட்ட மன்ற த்தில் கேள்விகளுக்கு பதிலளிக்கப்பட்டு, சில முர ண்பாடான வார்த்தைகள் இருந்தால் நீக்குவது மரபு. கடந்த ஆட்சியில் ஜனநாயகத்திற்கு இடமில்லை என்பது தெரியும். ஆகையால், இந்த வார்த்தைகளை கேட்டிருக்க மாட்டீர்கள். இந்த ஆட்சியில் ஜனநாயகம் முக்கிய பங்காற்றுகிறது.

சபாநாயகர் அவரது பணியை சிறப்பாக மேற்கொண்டு வருகிறார். முதன்முறையாக சட்டமன்றத்திற்கு வந்திருக்கும் நாங்கள் மாண்புடன் கருத்துக்களை முன்வைக்கிறோம். ஆனால், திமுகவினர் எழுந்து நின்று வரிக்கு வரி கூச்சலிடுவது, ஓடுவது மற்றும் தற்போதைய அமைச்சர்கள் பேசும்போது தகாத வார்த்தைகளில் பேசுவது என சட்டமன்றத்தையே சந்தையை போல மாற்றி வருகின்றனர்.

ஆயிரம் ஆண்டுகள் பழைமையான மற்றும் சிதிலமடைந்த கோயி ல்களை புது ப்பித்து வழிபாட்டு க்குக் கொண்டு வரு வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. விரைவில் அறங்காவலர் நியமனக்குழு அமை க்கப்படும்.

திருச்சி மாநகரில் நடைபெற்று வரும் 2 பாலங்கள் அமைக்கும் பணிகள் நிறைவுபெற்றுள்ளது. அது விரைவில் மக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வரப்படும்.

நாங்கள் நேர்த்தியானவர்கள் என கூறும் முன்னாள் அமைச்சர், இந்து சமய அறநிலைத்துறையின் அறிவிப்புகள் குறித்து அதிகாரிகளை தொடர்பு கொண்டு தெரிந்துகொள்ள வேண்டிய அவசியம் என்ன? மடியில் கனம் இருப்பதால் இதுபோன்ற செயல்களில் அவர் ஈடுபடுகிறார். தவறுகளை கண்டுபிடித்து விடுவோம் என்கிற பயத்தில் அவர் இருக்கிறார். அந்த பயம்தான் எங்களது ஆட்சிக்கு கிடைத்த முதல் வெற்றி. இந்து சமய அறநிலையத்துறையின் அறிவிப்புகள் வெளியான விவகாரத்தில் சம்பந்த ப்பட்ட அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

முதன்மை திருக்கோயில்களில் பக்தர்கள் தங்குவதற்காக திமுக ஆட்சியில் சொகுசு விடுதிகள் ஆரம்பிக்கப்பட்டன. அது எந்த பக்தர்கள் என்பது அனைவருக்கும் தெரியும். ஆகையால், அதை ரத்து செய்தோம்.

திருச்செந்தூர் ஆய்வுக்கு பிறகு 90 சதவீதம் மாறிவிட்டது. வார இறுதி நாட்கள் மற்றும் முக்கிய நாட்களில் கூட்டம் அதிகரித்து காணப்படுகிறது. அதனை கையாள்வது என்பது கடினமானது. பணம் பெற்றுக் கொண்டு தரிசனத்திற்கு அழைத்து வருவது ஆங்காங்கே நடைபெறுகிறது. இதனை கட்டுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

முதற்கட்டமாக 50-க்கும் மேற்பட்ட முதல்நிலை கோயில்களில் செல்போன்களுக்கான கவுண்டர்கள் உருவாக்கப்பட்டுள்ளன. கோயில் கருவறைகளை வீடியோ எடுப்பதை தவிர்க்கும் பொருட்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த முன்னெடுப்பை பொதுமக்கள் தயவுசெய்து பின்பற்ற வேண்டும்.

கோயில்களில் விஐபி, விவிஐபி மற்றும் சினிமா நட்சத்திரங்கள் தரிசனத்திற்கு வரும்போது அவர்களுடன் பத்திரிக்கையாளர்களும் வந்து, கோயில் வளாகத்தில் வைத்து அரசியல் சார்ந்த கேள்வி கேட்பதைத் தவிர்க்க வேண்டும்" என கேட்டுக் கொண்டார்.

## சட்டமன்றமே ரீல்ஸ்க்காக தான் நடத்தப்படுகிறது - கனிமொழி விமர்சனம்



தூத்துக்குடி, ஆக.24-
சட்டமன்றமே ரீல்ஸ்க்காக தான் நடத்தப்படுகிறது என்ற உணர்வை அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்று த.வெ.க அரசை கனிமொழி எம்பி விமர்சித்துள்ளார்.

திருநெல்வேலியில் மாவட்டத்தில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்காக திமுக துணை பொதுச் செயலாளரும், தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினருமான கனிமொழி, சென்னையில் இருந்து விமானம் மூலம் தூத்துக்குடி வாகைகுளம் விமான நிலையம் வருகை தந்தார்.

விமான நிலையத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர், "த.வெ.க ஆட்சி பொறுப்பேற்ற பின்பு தொடர்ந்து குற்றங்கள் பெருகிக் கொண்டே வருகிறது. பெண்கள், குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், ஆணவக் கொலைகள், லாக்கப் மரணங்கள் என்று சட்டம், ஒழுங்கு சீர்கெட்டு இருக்கக்கூடிய சூழலை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அதைவிட கவலைக்குரிய ஒன்று, இந்த குற்றங்களில் பல குற்றங்களை செய்திருக்கக் கூடியவர்கள் த.வெ.கவை சேர்ந்தவர்களாக நாம் காணக்கூடிய சூழல் இருக்கிறது. சில நேரங்களில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது. பல நேரங்களில் அங்கே இருக்கக்கூடிய நிர்வாகிகள் மீது குற்றம் சுமத்தப்படும்போது எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை என்பதை நாம் பார்த்திருக்கிறோம். தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு மிகப்பெரிய கேள்விக்குறியாக இந்த ஆட்சியில் மாறி இருக்கிறது" என குற்றம் சாட்டினார்.

தொடர்ந்து தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் மாணிக்கம் தாகூர், "தவெகவின் அமைச்சர்கள் இன்றும் ரீல்ஸ் மோடில் தான் இருப்பதாக கூறியிருக்கிறார்" என்று செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த கனிமொழி எம்பி, "அரசைப் பற்றி பேசுகிறார் என்றால், அவர் கூட்டணியில் இருக்கக்கூடிய ஆட்சி அது. சட்டமன்றமே ரீல்ஸ்க்காக தான் நடத்தப்படுகிறது என்ற உணர்வை அவர்கள் உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள்" என விமர்சித்துள்ளார்.

## பணி நிரந்தரம், ஊதிய உயர்வு கோரி போராடிய தூய்மை பணியாளர்கள்: குண்டுக்கட்டாக தூக்கி கைது செய்த போலீசார்



சென்னை, ஆக.24-
பணி நிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்ட தூய்மைப் பணியாளர்களை காவல்துறையினர் குண்டுக்கட்டாகத் தூக்கி கைது செய்தனர்.

பணி நிரந்தரம், சம்பள உயர்வு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தும், த.வெ.க அரசு கொடுத்த தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்ற வலியுறுத்தியும் உழைப்போர் உரிமை இயக்கம் சார்பில், தூய்மை பணியாளர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர்.

அந்த வகையில், நேற்று (ஆக.22) சென்னை பெரியமேடு பகுதியில் உள்ள அம்பேத்கர் சிலை முன்பு சுமார் 50-க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதில், தூய்மை பணியாளர்கள் பணி நிரந்தரம், ஊதிய உயர்வு போன்ற கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்றும், முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் தங்களை அழைத்து பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

மேலும், ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பெண்களில் சிலர், அம்பேத்கர் சிலையை பிடித்து கண்ணீர் மல்கக் கோரிக்கையை முன்வைத்தனர். இதுதொடர்பாக, தூய்மை பணியாளர்களுக்கான சங்கம், உழைப்போர் உரிமை இயக்கத்துடன் தமிழக அரசு பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்றும் தெரிவித்தனர்.

இதற்கிடையே, சம்பவ இடத்திற்கு வந்த காவல்துறையினர், ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட தூய்மை பணியாளர்களை கைது செய்யும் விதமாக போலீஸ் வாகனத்தில் ஏற்றினர். சிலர் செல்ல மறுத்து போலீசாருடன் வாக்குவாதம் செய்ததால், அவர்களை குண்டுக்கட்டாக தூக்கிச் சென்றனர்.

முன்னதாக செய்தியாளர்களிடம் பேசிய உழைப்போர் உரிமை இயக்கத்தின் 7 வது மண்டல மாநில செயலாளர் ஹறி பிரசாத், "கடந்த ஆண்டு முதல் போராடி வருகிறோம். 165 நாட்களுக்கு மேலாக போராடினோம். இப்போதைய முதலமைச்சராக உள்ள விஜய், அன்று எங்களை அழைத்துப் பேசி, ஆதரவு தந்தனர். ஆனால், ஆட்சி மாற்றம் ஏற்பட்டு த.வெ.க அரசு பதவிக்கு வந்தவுடன் எங்கள்போராட்டத்தையோ எங்கள் கோரிக்கையையோ கண்டு கொள்வதில்லை.

சட்டமன்ற உறுப்பினர்களும் கார் வாங்கித் தருவதாக முதலமைச்சர் சொல்கிறார். ஆனால் தூய்மைப் பணியாளர்களுக்கு சம்பளம் உயர்த்தி வழங்க யாரும் முன்வரவில்லை. கேட்டால், நிதி நிலைமை சரியில்லை என்று சொல்கிறார்கள். யாருடைய அப்பா வீட்டு பணத்தில் எம்.எல்.ஏ.க்களுக்கு கார் வாங்கி கொடுக்கிறீர்கள்?" என கேள்வி எழுப்பினார்.

தொடர்ந்து பேசிய அவர், "நாங்கள் யார் தூண்டுதலின் பேரிலும் செயல்படவில்லை. எங்களுக்கான முறையான சம்பளம் உயர்வு, பணி நிரந்தரம் இரண்டை தான் கேட்கிறோம். ஒவ்வொரு ஆட்சியிலும் கோரிக்கைக்காக போராடி வருகிறோம். நாங்கள் தவெக அரசை வரவேற்கிறோம்.

ஆனால், திமுக செய்ததை தான் அவர்களும் செய்கிறார்கள். புதிதாக எதையும் செய்யவில்லை. தூய்மைப் பணியாளர்களின் நிலைபாடு என்ன என்பது முதலமைச்சர் மற்றும் அமைச்சர்களுக்கு நன்றாகவே தெரியும்" என்றார்.

இந்நிலையில், தூய்மை பணி யாளர்கள் கைது குறித்து அமமுக பொதுச்செயலாளர் வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, பணி நிரந்தரம் கோரி போராடிய தூய்மைப் பணியாளர்களை பனையூருக்கு அழைத்து ஆறுதல் தெரிவித்த தவெக தலைவர் ஜோசப் விஜய், முதலமைச்சரான பின்பு அதே தூய்மைப் பணியாளர்களின் கோரிக்கையை கேட்க ஒரு அமைச்சரைக் கூட அனுப்பாதது ஏன்?

5 ஆண்டுகள் அல்லது அதற்கு மேலாகப் பணியாற்றிய பணியாளர்கள் அனைவரும் பணி நிரந்தரம் செய்யப்படுவார்கள் என்று தவெக தனது தேர்தல் வாக்குறுதியில் தெரிவித்துவிட்டு, ஆட்சிக்கு வந்ததும் அவர்களின் கோரிக்கையை நிறைவேற்ற முன்வராததன் காரணமே, தூய்மைப் பணியாளர்களை போராட்டக் களத்திற்கு தள்ளியுள்ளது.

மக்களின் சுகாதாரத்தை யும், சென்னை மாநகரத்தின் தூய்மையையும் பேணிக்காக்கும் தூய்மைப் பணியாளர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும் என்ற அடிப்படைக் கோரிக்கையை ஏற்க மறுத்து, காவல்துறையின் மூலம் அவர்கள் மீது அடக்குமுறையை ஏவியிருப்பது கடும் கண்டனத்திற்குரியது" என தெரிவித்துள்ளார்.



## புதிய திருக்கோயில் கட்ட பூமி பூஜை

மானாமதுரை, ஆக-24
சிவகங்கை மாவட்டம் மானாமதுரை கன்னார் தெருவில் உள்ள ஆயிரம் ஆண்டுகளுக்கும் மேல் பழமையான அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் திருக்கோயிலில், புதிய திருக்கோயில் கட்டுவதற்கான பூமி பூஜை விழா இன்று சிறப்பாக நடைபெற்றது.

மானாமதுரை மற்றும் சுற்றுவட்டார பகுதி மக்களின் முக்கிய ஆன்மிகத் தலமாக விளங்கும் இந்தக் கோயிலின் பழைய கட்டிடங்கள் பழுதடைந்த நிலையில் இருந்ததால், அவற்றை அகற்றி பாரம்பரிய கட்டிடக்கலை அம்சங்களுடன் கல் மண்டபத்தில் புதிய கோயில் அமைக்க முடிவு செய்யப்பட்டது.

இதையடுத்து, திருப்பணிகள் தொடங்கும் வகையில் நடைபெற்ற பூமி பூஜையில் கோயில் நிர்வாகிகள், ஐந்து பங்காளிகள் மற்றும் ஏராளமான பக்தர்கள் பங்கேற்று சிறப்பு வழிபாடு செய்தனர்.

இந்தக் கோயிலில் ஆண்டுதோறும் ஆடி மாத பொங்கல் விழா, முளைப்பாரி விழா உள்ளிட்ட நிகழ்ச்சிகள் வெகு விமரிசையாக நடைபெறுவது வழக்கம். புதிய கட்டுமானப் பணிகள் நிறைவடைந்ததும், அடுத்த ஆண்டு கும்பாபிஷேகம் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஆயிரம் ஆண்டுகள் பழமையான திருத்தலம் புதுப்பொலிவுடன் புதிய வடிவம் பெறவுள்ளதால், பக்தர்கள் மத்தியில் மகிழ்ச்சியும் எதிர்பார்ப்பும் ஏற்பட்டுள்ளது.

## கும்மிடிப்பூண்டி சிப்காட்டில் குண்டும், குழியுமான சாலையால் வாகன ஓட்டிகள் கடும் அவதி சீரமைக்க பொதுமக்கள் கோரிக்கை

கும்மிடிப்பூண்டி, ஆக.24-
கும்மிடிப்பூண்டி சிப்காட்டில் குண்டும், குழியுமான சாலையால் வாகன ஓட்டிகள் கடும் அவதிக்குள்ளாகி வரும் நிலையில், அதனை சீரமைக்க வேண்டும், என்று பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். கும்மிடிப்பூண்டி சிப்காட் வளாகத்தில் மின் உற்பத்தி, ஆட்டோ கேஸ்டிங், மின் உதிரி பாகங்கள், கார்பன், காப்பர், எலக்ட்ரிகல் வயர், கட்டுமான உதிரி பாகங்கள் என 3 ஊராட்சிகளில் 326 தொழிற்சாலையில் 11,200 பேர் பணியாற்றி வருகின்றனர். இந்த தொழிற்சாலையில் பணியாற்றி வரும் தொழிலாளர்கள் இருசக்கர வாகனங்களில் வந்து செல்கின்றனர்.இந்நிலையில், சிப்காட் சாலையானது தற்போது குண்டும், குழியுமாக காணப்படுவதால் இருசக்கர வாகனங்களில் வரும் பொதுமக்கள் கடும் அவதிக்குள்ளாகின்றனர். சாலையில் உள்ள ராட்சத பள்ளங்களில் நிலைதடுமாறி கீழே விழுந்து காயமடைகின்றனர். அதேபோல், தொழிற்சாலைகளுக்கு உற்பத்தி பொருட்களை ஏற்றி வரும் வாகனங்கள் பள்ளங்களில் சிக்கிக் கொள்கிறது. சாலையில் ஆங்காங்கே உள்ள பள்ளங்களால் அடிக்கடி சாலை விபத்துகள் ஏற்படுகிறது. பழுதடைந்த சாலையை சீரமைக்க வேண்டும், என்று தொழிலாளார்கள் பலமுறை கோரிக்கைவிடுத்தும் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காமல் காலம்தாழ்த்தி வருகின்றனர்.

இதுகுறித்து பொதுமக்கள் கூறுகையில், 'சிப்காட் தொழிற்பேட்டையில் சீரான சாலை வசதி இல்லாததால் வாகன ஓட்டிகள் கடும் அவதிக்குள்ளாகின்றனர். இருசக்கர வாகனங்களில் வருவோர் பள்ளத்தில் தவறி விழுந்து காயமடைகின்றனர். இதனை தவிர்க்க பழுதடைந்த சாலையை சீரமைக்க அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அதேபோல், இங்குள்ள சாலைகளில் மின்விளக்கு இல்லாததால் இருள் சூழ்ந்து காணப்படுகிறது. இப்பகுதியில் கண்காணிப்பு கேமராக்கள் இல்லாததால் திருட்டு, வழிப்பறி போன்ற குற்ற சம்பவங்கள் அதிகளவில் நடக்கிறது. எனவே, சாலைகளில் மின்விளக்குகள் அமைக்க வேண்டும். முக்கிய சந்திப்புகளில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தி பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்' என்றனர்.

## இது அரசா? சர்க்கஸ் கம்பெனியா? த.வெ.க.,வை கடுமையாக விமர்சித்த உதயநிதி



தஞ்சாவூர், ஆக.24-
தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டையில் திருமண நிகழ்ச்சியில் கலந்துகொண்ட உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது, "சமீபகாலமாக தஞ்சாவூர் மாவட்டத்துக்கு அடிக்கடி வந்து சென்று கொண்டிருக்கிறேன். கடந்த 3 மாதங்களில் 4 முறை தஞ்சாவூருக்கு வந்து சென்றேன். நான் வரவில்லையென்றாலும், இந்த அரசே என்னை கைது செய்து, இங்கு அழைத்து வருகின்றனர்.தஞ்சாவூர் மாவட்டத்தில் பேசும்போது ஜாக்கிரதையாக பேச வேண்டியுள்ளது. நாம் சரியாக இருந்தாலும், மேடைக்குக் கீழிருந்து பேசி நம்மை சிக்கவைத்து விடுவர். கைது நடவடிக்கைக்கெல்லாம் பயந்தவன் கிடையாது உதயநிதி. ஆக. 3-ல் தஞ்சையில் விவசாயிகளுக்கு ஆதரவாக போராட்டம் நடத்தினோம். காவிரியில் தண்ணீர் வரவில்லை என்றுதான் போராட்டத்தில் பேசினேன்.டம்மி முதல்வர், கேடுகெட்ட அரசாங்கம், வெக்கங்கெட்ட முதல்வர், தேர்தல் வாக்குறுதியைச் செயல்படுத்த வக்கில்லை என்றெல்லாம் பேசினேன். அவற்றுக்கெல்லாம் அவர்களுக்கு கோபம் வரவில்லை.

ஆனால், காவிரியில் தண்ணீர் வரவில்லை என்று சொன்னதும் அவர்களுக்கு கோபம் வந்துவிட்டது. இரவோடு இரவாக தஞ்சையிலிருந்து காவல்துறையினரை அனுப்பி, அதிகாலையிலேயே என் வீட்டுக்கு வந்து என்னை கைது செய்தனர். இதனைத் தொடர்ந்து, நீதிமன்ற விசாரணையில் என்னை கைது செய்யவில்லை என்றும், விசாரணைக்குப் பிறகு அனுப்பி விடுவோம் என்று பல்டி அடித்து விட்டனர்.விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணம் அளிக்க அரசிடம் நிதி இல்லை என சொல்லிவிட்டனர். ஆனால், எம்எல்ஏ-க்களுக்கு கார் வழங்குவதற்கு முடிவு செய்துள்ளனர். அதற்கு மட்டும் எங்கிருந்து நிதி வந்தது? வறட்சி நிவாரணம் கேட்ட விவசாயிகளுக்கு, இதுவரையில் தவெக அரசு பதிலளிக்கவில்லை.

தேர்தல் வாக்குறுதிகளான மகளிருக்கு ரூ. 2,500 உரிமைத் தொகை ஆண்டுக்கு 6 சிலிண்டர்கள், வேலையில்லாதோருக்கு மாதம் ரூ. 4,000 என எதுவுமே தவெக அரசு கொடுக்கவில்லை.

சட்டப்பேரவையில் கேட்கப்படும் கேள்விகளுக்கு முதல்வர் பதில் அளிப்பதேயில்லை. 3, 4 அமைச்சர்கள்தான் பதிலளிக்கின்றனர். அவர்களும் கேள்விகளுக்கான சரியான பதிலளிக்காமல், திசைதிருப்புகின்றனர். சட்டப்பேரவைக்கு அமைச்சர்களும் ஆளுங்கட்சி உறுப்பினர்களும் மக்கள் பிரச்னை பேசுவதற்காக வருவதில்லை. அவர்களுக்குத் தேவை 4 ரீல்ஸ்.இவர்கள் சர்கார் நடத்துகிறார்களா? அல்லது சர்க்கஸ் கம்பெனி நடத்துகிறார்களா? என்று கேட்கும் நிலையில்தான் இந்த அரசின் செயல்பாடுகள் இருக்கின்றன.

திமுக ஆட்சியில் 11.19 சதவிகிதத்துடன் இந்தியாவில் முன்னேற்றமடைந்த முதல் மாநிலமாக இருந்த தமிழ்நாட்டை, இன்று பாதாளத்தில் தள்ளிவிட்டனர்.

தமிழ்நாட்டில் இன்று இருக்கும் எந்தவொரு பிரச்னை குறித்தும் இன்றைய முதல்வருக்கு கவலை கிடையாது" என்று தெரிவித்தார்.




## உறவினர்களுக்குள் அரிவாள் வெட்டு: சட்ட மாணவர் உயிரிழப்பு இருவர் கைது

மானாமதுரை, ஆக.24
சிவகங்கை மாவட்டம் மானாமதுரை காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சின்ன தேனாபுதுக்கோட்டை கிராமத்தில், உறவினர்களுக்கிடையே ஏற்பட்ட தகராறில் இளைஞர் ஒருவர் வெட்டிக் கொலை செய்யப்பட்டார். இது தொடர்பாக அவரது மாமா மற்றும் உறவினர் ஒருவரை போலீசார் கைது செய்தனர்.

சின்ன தேனாபுதுக்கோட்டையைச் சேர்ந்த வெள்ளைச்சாமியின் மகன் சிவபாலன் (30). இவர் புதுச்சேரி பல்கலைக்கழகத்தில் சட்டப்படிப்பில் 2 ஆண்டுகள் பயின்று, பின்னர் படிப்பைத் தொடராமல் இருந்ததாகக் கூறப்படுகிறது.


சிவபாலன் தனது உறவினரான தாரணியை காதலித்து திருமணம் செய்ய விரும்பியதாகத் தெரிகிறது. இதுதொடர்பாக, தாரணியின் தந்தையான முருகேசன் (50) மற்றும் அவரது மகன் அருணிடம் சிவபாலன் பேசியுள்ளார். அப்போது திருமண ஏற்பாடு தொடர்பாக அவர்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

வாக்குவாதம் முற்றியதில் இருதரப்பினரும் அரிவாளால் தாக்கிக் கொண்டதாக போலீசார் தெரிவித்தனர். இதில் தலையில் பலத்த காயமடைந்த சிவபாலன் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். முருகேசன் மற்றும் அருணும் காயமடைந்ததாக கூறப்படுகிறது.

தகவலறிந்த சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர், மானாமதுரை துணைக் காவல் கண்காணிப்பாளர் மற்றும் காவல் ஆய்வாளர் ஆகியோர் சம்பவ இடத்துக்கு விரைந்து விசாரணை நடத்தினர். பின்னர், முருகேசன் மற்றும் அருணை போலீசார் கைது செய்தனர்.

சிவபாலனின் உடல் பிரேதப் பரிசோதனைக்காக சிவகங்கை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மானாமதுரை போலீசார் வழக்குப்பதிவு செய்து, கைது செய்யப்பட்ட இருவரையும் நீதிமன்ற காவலுக்கு அனுப்ப நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

## "ராகுலின் 'மாணவர் குரல்' நிகழ்ச்சியால் பாஜக நிலைகுலைந்து விட்டது": காங். விமர்சனம்



மும்பை, ஆக.24-
புனேவில் காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி மாணவர்களுடன் நடத்திய கலந்துரையாடல் 'அரசியல் நகைச்சுவை' என்று பாஜக விமர்சித்துள்ள நிலையில், ராகுல் காந்தியின் நிகழ்ச்சிக்குக் கிடைத்த வரவேற்பைக் கண்டு பாஜக 'நிலைகுலைந்து போயுள்ளது' என காங்கிரஸ் பதிலடி கொடுத்துள்ளது.

மக்களவை எதிர்க்கட்சித் தலைவரான ராகுல் காந்தி, காங்கிரஸ் கட்சியின் 'மாணவர் குரல்' நிகழ்ச்சியின் மூலம் புனேவில் மாணவர்களுடன் கலந்துரையாடினார். இதுகுறித்து விமர்சித்த பாஜக மகாராஷ்டிர துணைத் தலைவர் கேசவ் உபத்யே, "இந்நிகழ்ச்சியில் பங்கேற்க மாணவர்கள் கல்லூரிப் பேருந்துகளில் அழைத்து வரப்பட்டனர். மாணவர்களின் பெயரில் நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியை காங்கிரஸ் ஒரு அரசியல் கூட்டமாக மாற்றிவிட்டது. ராகுல் காந்தியின் புனே நிகழ்ச்சி மற்றொரு அரசியல் நகைச்சுவையாக அமைந்தது.

ராகுல் காந்தியின் பேச்சில் வழக்கமான குற்றச்சாட்டுகள் இருந்ததே தவிர, காங்கிரஸ் கட்சியின் சொந்த செயல்பாடுகள் குறித்து எதுவும் பேசவில்லை. நரேந்திர மோடி அரசின் வளர்ச்சிப் பணிகளை எதிர்கொள்ள முடியாததால், காங்கிரஸ் சாதி மற்றும் மதம் சார்ந்த பிரச்சினைகளை எழுப்ப முயற்சிக்கிறது.

அதிகாரத்தை இழந்த விரக்தி, தேர்தல் தோல்விகள் மீதான கோபம் மற்றும் மோடி மீதான பயம் ஆகியவைதான் ராகுல் காந்தியின் இந்த 'நகைச்சுவை நிகழ்ச்சி'க்குக் காரணம். மக்கள் இதைப் பார்த்து சிரித்துக் கொண்டிருக்கும் வேளையில், காங்கிரஸ் இன்னும் தனது தேர்தல் தோல்விகளுக்கான காரணங்களைத் தேடிக்கொண்டிருக்கிறது" என்றார்.

இதற்குப் பதிலடி கொடுத்துள்ள காங்கிரஸ் தேசியச் செயலாளர் சச்சின் சாவந்த், "ராகுல் காந்தியின் நிகழ்ச்சிக்குக் கிடைத்த பலமான வரவேற்பைக் கண்டு பாஜக நிலைகுலைந்து போயுள்ளது. இளைஞர்கள் மத்தியில் ராகுலுக்கு அதிகரித்து வரும் செல்வாக்கைக் கண்டு பாஜக தூக்கத்தை தொலைந்துவிட்டது.

ஞாயிற்றுக்கிழமை அன்று நாக்பூரில், மகாராஷ்டிர முதல்வர் தேவேந்திர ஃபட்னாவிஸ், ஜென் ஸி தலைமுறையிடம் நடத்தும் கலந்துரையாடலில், அவர் மனுஸ்மிருதியின் முக்கியத்துவத்தைப் பற்றியும், ஆணாதிக்க அமைப்பு நல்லது என்றும், பெண்கள் என்ன அணிய வேண்டும், என்ன பேச வேண்டும், எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை ஆர்.எஸ்.எஸ் மற்றும் வி.எச்.பி தான் தீர்மானிக்கும் என்றும் கூறுவாரோ?

புனேவில் ராகுல் காந்தி மாணவர்களுடன் நடத்திய கலந்துரையாடலுக்குக் கிடைத்த முன்னெப்போதும் இல்லாத வரவேற்பால் பாஜக அதிர்ச்சி அடைந்துள்ளது. இந்த நிகழ்ச்சிக்கு எதிராக மெட்ரோவை நிறுத்தி, பல கட்டுப்பாடுகளை விதித்து, வன்முறையில் ஈடுபட்ட போதிலும், ஏராளமான இளம் பெண்கள் திரண்டனர்.

இது பாஜகவை உலுக்கியுள்ளது. பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் பட்னாவிஸ் ஆகியோர் தூக்கத்தை இழந்துள்ளனர் என்பது தெரிகிறது. ஆனால் இந்த அச்சம் நல்லதுதான்" என்று கூறினார்.

# வன அதிகாரிகளை ஊரக வளர்ச்சி திட்ட இயக்குநர்களாக நியமிப்பதா? - அரசுக்கு அன்புமணி எதிர்ப்பு

சென்னை, ஆக.24-

ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர்களாக இந்திய வனப்பணி அதிகாரிகளை நியமிக்கும் முடிவை தமிழக அரசு கைவிட வேண்டும். அதற்கு பதிலாக திட்ட இயக்குநர் பதவியை ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்குவதன் மூலம் நிரப்ப வேண்டும் என்று பாமக தலைவர் அன்புமணி வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "தமிழ்நாட்டில் தேனி, கன்னியாகுமரி மாவட்டங்களின் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர்களாக இந்திய வனப்பணி அலுவலர்களை (Indian Forest Service - IFS) நியமித்து அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கிராமப்புற மக்களுக்கு நேரடியாக சேவை வழங்க வேண்டிய பொறுப்புகளில், அத்துறைக்கு எந்த வகையிலும் தொடர்பில்லாத வனப்பணி அலுவலர்களை நியமிப்பது ஊரக மக்களுக்கான சேவையை சீர்குலைத்து விடும்.

தமிழக அரசு நிர்வாகத்தில் வருவாய்த்துறைக்கு அடுத்தபடியாக மக்களுடன் நேரடியாக தொடர்புள்ள துறை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை தான். கிராமப் பகுதிகளில் சாலைகள், பாலங்கள், வீட்டு வசதி, குடிநீர், கழிப்பிடங்கள் உள்ளிட்ட அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை இந்தத் துறை தான் ஏற்படுத்தித் தருகிறது. இவை அனைத்தையும் விட, கடந்த காலங்களில் 100 நாள் வேலைத் திட்டத்தையும், இப்போது அறிவிக்கப்பட்டுள்ள 150 நாள் வேலைத் திட்டத்தையும் இந்தத் துறை தான் செயல்படுத்துகிறது.

இந்தத் துறையின் மாவட்ட அளவிலான தலைமை அதிகாரிகள் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனரும், தமிழ்நாடு ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குனரும் தான். வனப் பணி அலுவலர்களுக்கும் இந்தப் பணிகளுக்கும் எந்த தொடர்பும் இல்லாத நிலையில், அவர்களை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குனர்களாக நியமித்தால் ஊரக வளர்ச்சித் துறையின் செயல்பாடுகள் மெச்சத்தக்கதாக அமையாது.

ஊரக வளர்ச்சித் துறைக்காக தனியாக பணியாளர் படிநிலைகள் உள்ளன. இந்தத் துறையின் தொடக்க நிலை பணி என்பது இளநிலை உதவியாளர் மற்றும் உதவியாளர் பணியிடங்கள் தான். இந்தப் பணிகளுக்கு தகுதியானவர்கள் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் நடத்தும் போட்டித் தேர்வுகளின் வாயிலாக தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அடுத்தடுத்த நிலைகளில் அவர்கள் துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர் என பதவி உயர்வு பெறுகிறார்கள். இந்தப் பணிகளில் 20 ஆண்டுகளுக்கும் மேல் பணியாற்றுபவர்கள் ஊரக வளர்ச்சித் துறையில் உதவி இயக்குனர் நிலைக்கு உயர்த்தப்படுகிறார்கள்.



இது தவிர தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் நடத்தும் முதல் தொகுதி பணிகளுக்கான போட்டித் தேர்வுகள் மூலம் ஊரக வளர்ச்சித் துறைக்கு நேரடியாக உதவி இயக்குனர்கள் நியமிக்கப்படுகின்றனர். அவர்கள் ஊரக வளர்ச்சித் துறையில் இணை இயக்குனர் நிலைக்கு உயரும் போது ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குனர்களாக நியமிக்கப்படலாம். அவ்வாறு நியமிக்கப்படும் போது ஊரக வளர்ச்சித் துறை, ஊராட்சிகள், கிராமப்புற மக்களின் தேவைகள் ஆகியவற்றை மிகவும் நன்றாக அறிந்திருப்பார்கள் என்பதால் சிறப்பாக பணியாற்ற முடியும்.

ஆனால், அந்த வாய்ப்பை அவர்களுக்கு வழங்காமல் இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளை நேரடியாக திட்ட இயக்குனர்களாக நியமிப்பதை தமிழக அரசு வாடிக்கையாக வைத்திருந்தது. இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் இப்பணிக்கு நியமிக்கப்பட்டதற்குக் கூட ஓரளவு ஏற்கத்தக்க வகையில் ஒரு காரணம் கற்பிக்கப்பட்டது. இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகள் பிற்காலத்தில் மாவட்ட ஆட்சியர்களாக பணி செய்ய வேண்டியிருக்கும் என்பதால், அதற்கு இந்தப் பணி சிறந்த பயிற்சிக் களமாக இருக்கும் என்று கூறப்பட்டது.

ஆனால், இப்போது இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளை நியமிப்பதை விட்டு விட்டு, இந்திய வனப்பணி அதிகாரிகளை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குனர்களாக நியமிப்பதற்கு எந்த நியாயமான காரணங்களும் இல்லை. இது ஊரக வளர்ச்சித் துறையில் பல்வேறு நிலைகளில் பணியாற்றும் அதிகாரிகளுக்கும், ஊரகப் பகுதிகளில் வாழும் மக்களுக்கும் வழங்கப்படும் தண்டனையாகவே அமையும்.

ஊரகப் பகுதி மக்களின் தேவைகள் என்னவென்பதை அறிந்து அவற்றை நிறைவேற்றுவதற்கு தேவையான அனுபவம் இந்திய வனப்பணி அலுவலர்களுக்கு இருக்காது. அதனால் ஊரக வளர்ச்சி கடுமையாக பாதிக்கப்படும். இந்த நியமனங்களுக்கு ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகள் கடுமையாக எதிர்ப்பு தெரிவித்து வருவதால் அவர்களுக்கும், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைகளின் திட்ட இயக்குனர்களுக்கும் இடையே சரியான ஒத்துழைப்பு இல்லாத நிலை உருவாகி அது ஒட்டுமொத்த துறையின் செயல்பாடுகளையும் முடக்கி விடும்.

இன்னொருபுறம், தமிழக அரசின் இந்த முடிவால் ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகளின் பதவி உயர்வு வாய்ப்புகள் கடுமையாக பாதிக்கப்படும். மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குனர் பதவி என்பது ஊரக வளர்ச்சித் துறை இணை இயக்குனர் பதவிக்கு ஒப்பானதாகும். இந்தப் பணிக்கு ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகளை பதவி உயர்வின் மூலம் நியமித்தால் தான் அவர்களுக்கு உதவி இயக்குனர், துணை இயக்குனர், இணை இயக்குனர், கூடுதல் இயக்குனர் என பல்வேறு நிலைகளுக்கு பதவி உயர்வு பெற முடியும்.

மாறாக, திட்ட இயக்குனர் பணிக்கு அகில இந்திய பணி அலுவலர்களை தொடர்ந்து நியமித்து வருவதால், ஊரக வளர்ச்சித்துறை அதிகாரிகள் 35 ஆண்டுகள் என பணி செய்தாலும் அவர்களுக்கு இயல்பாகக் கிடைக்க வேண்டிய பதவி உயர்வுகள் கிடைப்பதில்லை. இந்த அநீதி போக்கப்பட வேண்டும்.

எனவே, ஊரகப் பகுதிகளின் வளர்ச்சி, மக்களுக்கு கிடைக்க வேண்டிய சேவை ஆகியவற்றைக் கருத்தில் கொண்டும், ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகளுக்கு பதவி உயர்வு கிடைப்பதை உறுதி செய்யவும் ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குனர்களாக இந்திய வனப்பணி அதிகாரிகளை நியமிக்கும் முடிவை தமிழக அரசு கைவிட வேண்டும். அதற்கு பதிலாக திட்ட இயக்குனர் பதவியை ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகளுக்கு பதவி உயர்வு வழங்குவதன் மூலம் நிரப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்" என்று அன்புமணி கூறியுள்ளார்.

# தீய சக்தி திமுகவை முதலமைச்சர் விஜய் ஒழித்துவிட்டார் - அமைச்சர் நிர்மல் குமார்

மதுரை, ஆக.24-

திமுக எனும் தீய சக்தியை அழிக்க வேண்டும் என்ற எம்.ஜி.ஆர்., ஜெயலலிதாவின் கனவை முதலமைச்சர் விஜய் நிறைவேற்றிவிட்டார் என அமைச்சர் நிர்மல் குமார் பேசினார்.

2026 சட்டமன்ற தேர்தலில் வெற்றி பெற்ற த.வெ.க தலைவர் விஜய் தலைமையிலான புதிய அரசு, தமிழ்நாட்டில் பொறுப்பேற்றுள்ளது. இந்நிலையில், தமிழக வெற்றிக் கழக அரசு 100 நாட்களைக் கடந்ததை முன்னிட்டு, அதன் 100 நாள் ஆட்சி சாதனைகளை விளக்கும் விதமாக மதுரை மாவட்டம் வாடிபட்டியில் நேற்று (ஆக.22) பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட அமைச்சர் சி.டி.ஆர் நிர்மல் குமார் சிறப்புரை ஆற்றினார். அப்போது பேசிய அவர், "40 ஆண்டுகளாக நான் பார்த்துக் கொண்டிருக்கிறேன். சோழவந்தான் சட்டமன்றத் தொகுதியில் எந்த ஒரு மாற்றமும் ஏற்படவில்லை.

இதுவரை எந்த தொகுதி எம்.எல்.ஏ.க்கள், அமைச்சரையாவது மக்கள் பார்த்திருப்பார்களா? இல்லை. ஏனென்றால், பணத்தை கொடுத்து வெற்றி பெற்றதோடு சரி, காணாமல் போய்விடுவார்கள். இனிமேல் அப்படி இல்லை.



நாங்கள் நல்ல மாற்றத்தை உருவாக்குவோம். நீங்கள் விரும்பி தேர்ந்தெடுத்த அரசு இது. உங்களுக்கான அரசு. தமிழக வெற்றிக் கழகம் சார்பாக மக்களுக்கு தேவையான அனைத்து திட்டங்களையும் செய்து தருவோம்" என உறுதியளித்தார்.

மேலும், "திமுகவில் சட்டமன்ற உறுப்பினராக, அமைச்சராக இருந்து மக்கள் பணத்தை கொள்ளை அடித்தவர்கள் யாராக இருந்தாலும் சரி, அவர்கள் மீது வழக்குப் பதிவு செய்து, சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

திமுகவை பழிவாங்க வேண்டியது இல்லை. மக்களே அவர்களை அடித்து துவைத்து வெளியேற்றி விட்டார்கள். நீங்கள் எவ்வளவு கொள்ளை அடித்தீர்கள்? என்று தெரிந்து தான் மக்கள் உங்களை ஆட்சியிலிருந்து வெளியேற்றி விட்டார்கள்.

எம்.ஜி.ஆர் தீய சக்தி திமுகவை ஒழித்தே தீருவோம் என்று சொன்னார். அதற்காகத்தான் நாங்கள் கட்சி ஆரம்பித்தோம். ஜெயலலிதாவும் தீய சக்தி திமுகவை ஒழிக்க வேண்டும் என்று சொன்னார். அந்த வகையில், முதலமைச்சர் ச.ஜோசப் விஜய் திமுகவை ஒழித்துக் கட்டி விட்டார்.

இன்னும் இரண்டு வருஷத்தில் அண்ணா அறிவாலயத்தை வெள்ளையடித்து, வாடகைக்கு விட வேண்டிய நிலை வரும். முரசொலி டிரஸ்ட்டை கைப்பற்ற அந்த குடும்பத்தில் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள்" என பேசினார் அவர்.

# சோழிங்கநல்லூரில் போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கை - 100+ போலீசார் அதிரடி சோதனை

சென்னை, ஆக.24-

சென்னை சோழிங்கநல்லூர் பகுதியில் கல்லூரி மாணவர்கள் தங்கியிருக்கும் குடியிருப்புகளில் அதிகாலையில் நூற்றுக்கும் மேற்பட்ட போலீஸார் அதிரடி சோதனை மேற்கொண்டனர். இதனால், அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.



காவல் துணை ஆணையர் ரகுபதி தலைமையில், செம்மஞ்சேரி உதவி ஆணையர், காவல் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள் மற்றும் போலீஸார் அடங்கிய சிறப்பு குழுவினர் இந்த சோதனையில் ஈடுபட்டனர். நூற்றுக்கும் மேற்பட்ட குடியிருப்பு வீடுகள் மற்றும் கல்லூரி மாணவர்கள் தங்கியிருக்கும் பகுதிகள் போலீஸாரின் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டன.

போதைப் பொருட்கள் விற்பனை மற்றும் பயன்பாட்டை தடுக்கும் நோக்கில், போலீஸார் 11 குழுக்களாகப் பிரிந்து ஒரே நேரத்தில் பல்வேறு குடியிருப்பு பகுதிகளில் சோதனை நடத்தினர். மாணவர்கள் தங்கியிருந்த வீடுகள், அறைகள் உள்ளிட்ட இடங்களில் சந்தேகத்திற்கிடமான பொருட்கள் உள்ளனவா என்பது குறித்து தீவிரமாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதிகாலை நேரத்தில் தொடங்கிய இந்த அதிரடி சோதனை சுமார் 3 மணி நேரம் நடைபெற்றது. சோதனையின்போது சிறு சிறு பாக்கெட்டுகளில் வைக்கப்பட்டிருந்த கஞ்சா மற்றும் கஞ்சாவை பயன்படுத்து வதற்கு பயன்படுத்தப்படும் உபகரணப் பொருட்கள் உள்ளிட்டவை போலீஸாரால் பறிமுதல் செய்யப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து செம்மஞ்சேரி உதவி ஆணையரிடம் கேட்டபோது, சோழிங்கநல்லூர் மற்றும் சுற்று வட்டார பகுதிகளில் கல்லூரி மாணவர்களிடையே போதைப் பொருட்கள் விற்பனை மற்றும் பயன்பாடு உள்ளதை தடுக்கும் நோக்கிலும், போதைப் பொருட்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தும் நோக்கிலும் இந்த திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவித்தார்.

மேலும், மாணவர்கள் தங்கியிருக்கும் குடியிருப்பு பகுதிகளில் போதைப் பொருட்கள் தொடர்பான நடவடிக்கைகள் தொடர்ந்து கண்காணிக்கப்படும் என்றும், விற்பனை செய்வோர் மற்றும் பயன்படுத்துவோர் மீது சட்டப்படி கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் போலீஸார் தெரிவித்தனர்.

வழக்கமாக அதிகாலை நேரத்தில் அமைதியாக காணப்படும் சோழிங்கநல்லூர் குடியிருப்பு பகுதியில் ஒரே நேரத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட போலீஸார் குவிந்து சோதனை நடத்திய சம்பவம் பொதுமக்கள் மற்றும் அப்பகுதி குடியிருப்புவாசிகளிடையே பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

# "சமூக நீதிக்கான அரசமைப்புக் கருவியே இடஒதுக்கீடு" - சிராக் பாஸ்வான்

பாட்னா, ஆக.24-

சமூக நீதிக்கான அரசமைப்புச் சார்ந்த கருவியாக இடஒதுக்கீடு தொடர்கிறது என்று மத்திய அமைச்சர் சிராக் பாஸ்வான் கருத்து தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை அன்று டெல்லியின் ஜந்தர் மந்தரில் நூற்றுக்கணக்கானோர் திரண்டு இடஒதுக்கீடு முறையில் சீர்திருத்தம் வேண்டுமென போராட்டத்தில் ஈடுபட்டனர்.இடஒதுக்கீடு சாதி அடிப்படையில் அல்லாது குடும்பத்தின் வருவாய் அடிப்படையில் வேண்டுமென்று அவர்கள் வலியுறுத்தினர்.

இந்த போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் காவல் துறை அனுமதி வழங்கிய நேரத்தை கடந்து போராட்டத்தில் ஈடுபட்ட காரணத்தால் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில், பாட்னா விமான நிலையத்தில் இது தொடர்பாக மத்திய அமைச்சர் சிராக் பாஸ்வானிடம் செய்தியாளர்கள் கேள்வி எழுப்பி இருந்தனர். அதுகுறித்து அவர் கூறியதாவது:

இடஒதுக்கீடு முறையை ஒருசிலரின் கோரிக்கையை ஏற்று இடஒதுக்கீடு முறையை முடிவுக்கு கொண்டு வர முடியாது. அது கருணை அடிப்படையிலானதும் அல்ல.

சமூக புறக்கணிப்பை எதிர்கொண்ட சமூகத்தின் சில பிரிவுகளை முன்னேற்றவே இடஒதுக்கீடு முறை அறிமுகமானது. குறிப்பிட்டு சொல்ல வேண்டுமென்றால் பட்டியல் சாதியினர் மற்றும் பட்டியல் பழங்குடியினரை நமது தேசத்தின் அரசமைப்பு அடையாளம் கண்டு, அவர்களின் முன்னேற்றுக்கான ஆதாரமாக இடஒதுக்கீட்டை அறிமுகம் செய்தது.

நமது சமூகத்தில் சமூக ரீதியான புறக்கணிப்பு சம்பவங்கள் அரங்கேறுகின்றன. அந்த வகையில் சமூக நீதிக்கான அரசமைப்புச் சார்ந்த கருவியாக இடஒதுக்கீடு தொடர்கிறது என்றார்.

# நவம்பர் 8-ம் தேதி தீபாவளி கொண்டாடப்படும்: கலிபோர்னியா சட்டப்பேரவையில் தீர்மானம்

வாஷிங்டன், ஆக.24-

அமெரிக்காவின் கலிபோர்னியா மாகாண சட்டப்பேரவை, 2026-ம் ஆண்டு நவம்பர் 8-ம் தேதியை "தீபாவளி தினமாக" அதி காரப்பூர்வமாக அங்கீகரித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. சட்டப் பேரவை உறுப்பினர்கள் தர்ஷனா படேல் மற்றும் ஆஷ் கல்ரா ஆகியோர் இந்தத் தீர்மானத்தை முன்மொழிந்தனர்.



இந்திய அமெரிக்கர்கள் மற்றும் தெற்காசியச் சமூகத்தினர் மீது ஆழ்ந்த மரியாதை செலுத்தும் இத்தீர்மானம், அன்றைய தினத்தில் கலிபோர்னியா மக்கள் அனைவரும் பங்கேற்று மகிழுமாறு அழைப்பு விடுக்கிறது. இந்துக்கள், சீக்கியர்கள், பவுத்தர்கள் மற்றும் ஜைனர்களால் கொண்டாடப்படும் 'விளக்குகளின் வரிசை' என்றழைக்கப்படும் தீபாவளி, இருள் மீது ஒளியும், தீமை மீது நன்மையும் வெல்லும் பண்டிகையாகச் சிறப்பிக்கப்படுகிறது.

இனிப்புகள், சுவையான உணவு மற்றும் ஒளிமயமான அலங்காரங்களின் மகிழ்ச்சியையும் தாண்டி, இத்தீர்மானம் தீபாவளியைத் தனிநபர் மற்றும் சமூக வளர்ச்சிக்கு வழிகாட்டும் ஒரு நிகழ்வாகவே பாவிக்கிறது.

"கொண்டாடுபவர்களுக்குத் தீபாவளி என்பது அறிவு, வளர்ச்சி மற்றும் மகிழ்ச்சிக்காகத் தங்களை அர்ப்பணிக்கும் காலம். இது ஞானம், இரக்கம் மற்றும் நேர்மறை மாற்றத்தின் அவசியத்தைச் சிந்தித்துப் பார்க்கும் தருணம்" என்றும் அத்தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ராகுல் காந்தி பிரதமரானதும் நீட் தேர்வு ரத்து - மாணிக்கம் தாகூர் உறுதி

கோயம்புத்தூர், ஆக.24-

ராகுல் காந்தி பிரதமரானதும் நீட் தேர்வு நிச்சயமாக ரத்து செய்யப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினரும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவருமான மாணிக்கம் தாகூர் தெரிவித்துள்ளார்.

கோவை விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்து பேசிய அவர், "நாடாளுமன்ற மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தலைமையில் காங்கிரஸ் கட்சி தொடர்ந்து குரல் எழுப்பியதன் விளைவாகவே, மாணவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்களுக்கு மத்திய அரசு பதில் அளிக்கும் நிலை உருவானது. பாதிக்கப்பட்ட மாணவர்களின் வீட்டிற்கே சென்று, அவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியவர் ராகுல் காந்தி மட்டுமே.



தமிழக காங்கிரஸ் கட்சியின் தெளிவான நிலைப்பாடு தமிழகத்தில் நீட் தேர்வு வரக்கூடாது என்பதுதான். இதனை 2019-ஆம் ஆண்டு தேர்தல் அறிக்கையிலேயே தெளிவாக குறிப்பிட்டிருந்தோம். அதிமுக ஆட்சிக் காலத்தில் அப்போதைய முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி, அன்றே மத்திய அரசிடம் உரிய அழுத்தம் கொடுத்திருந்தால் அனிதாவின் மரணம் நிகழ்ந்திருக்காது" எனத் தெரிவித்தார். மேலும், "ராகுல் காந்தி பிரதமரானதும் நீட் தேர்வு நிச்சயமாக ரத்து செய்யப்படும்" என்று உறுதி அளித்தார்.

அப்போது, முதலமைச்சர் விஜய்யை அவரின் கட்சியினர் நாளைய பிரதமர் என கூறுவது குறித்து செய்தியாளர் கேள்வி எழுப்பினார். அதற்கு பதிலளித்த அவர்,"அவர்கள் எல்லாம் இன்னும் ரசிகர் மன்ற மனநிலையிலேயே இருக்கிறார்கள். பாரதிய ஜனதா கட்சி அதிகாரத்தைப் பயன்படுத்தி பிற கட்சிகளை உடைத்து ஜனநாயகத்தைச் சீரழிக்கும் வேலையில் ஈடுபட்டு வருகிறது. தொகுதி மறுவரையறையின் மூலம் அவர்கள் கட்சியின் எம்.பி.க்களின் எண்ணிக்கையை அதிகரிக்க நினைக்கிறது. அதனை எதிர்த்து நாங்கள் போராடி கொண்டிருக்கிறோம். நாங்கள் அந்த மனநிலையில் இருக்கிறோம்" என கூறினார்.

மேகதாது விவகாரம் குறித்து பேசிய அவர், "தமிழக காங்கிரஸின் நிலைப்பாடு மிகத் தெளிவாக உள்ளது. அங்கு ஒரு செங்கல் கூட வைக்க முடியாது. இந்தியாவில் அனைத்து நதிகளையும் இணைப்பது சாத்தியமில்லாத ஒன்று. இயற்கையின் ஓட்டத்தை மாற்றாமல், கிடைக்க வேண்டிய நியாயமான தண்ணீரைப் பெறுவதற்கான வழிமுறைகளை மத்திய அரசு வலுப்படுத்த வேண்டும்" என்றார்.

மேலும், "தமிழகத்தில் நிலையான கொள்கைகள் பின்பற்றப்படுவதால் தொழில் முதலீடுகளுக்கு சாதகமான சூழல் நிலவுகிறது. இதன் மூலம் மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் சுமார் ஒரு லட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய நல்ல வாய்ப்பு உருவாகியுள்ளது" எனவும் மாணிக்கம் தாகூர் தெரிவித்தார்.

# எம்.பி.க்களுக்கு தேவையானது இதுதான்... ஜோதிமணி கோரிக்கை

சென்னை, ஆக.24-

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அலுவலகம் கட்டித் தர வேண்டும் என தமிழக அரசுக்கு காங்கிரஸ் எம்.பி. ஜோதிமணி கோரிக்கை விடுத்துள்ளார்.

கோவையில் செய்தியாளர்கள் சந்திப்பில் ஜோதிமணி எம்.பி. பேசியதாவது, "நாடாளுமன்ற உறுப்பினரோ சட்டப்பேரவை உறுப்பினரோ எல்லோருமே வசதியாக இருப்பதில்லை. எம்.பி.க்களுக்கும் தேவை என சில இருக்கின்றன.

எம்எல்ஏ, எம்.பி. என யாராக இருந்தாலும், அவர்களின் தொகுதியில் அனைத்து ஊர்களுக்கும் செல்ல வேண்டியிருக்கும். ஆனால், அவர்களால் அனைத்து ஊர்களுக்கும் சென்றுவிட முடியாது. பிரதமர் மோடி ஆட்சியில் பெட்ரோல் குறைந்த விலையில் இருக்கிறதா?



என்னுடைய தொகுதியில் 4 மாவட்டங்கள் வருகின்றன. திண்டுக்கல், திருச்சி, கரூர், புதுக்கோட்டை என திண்டுக்கல் ஆட்சியரகத்தில் தொடங்கி, புதுக்கோட்டை ஆட்சியரகத்தில் எனது தொகுதி முடிவடைகிறது. இதில் எரிபொருள் செலவு எவ்வளவு இருக்கிறது?

நாடாளுமன்ற, சட்டப்பேரவை உறுப்பினர்கள் நேர்மையாக இருக்க வேண்டுமெனில், அவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளை அரசு செய்து தருவதில் தவறில்லை.

எம்.பி.க்கள் சார்பாகவும் கோரிக்கை உள்ளது. தமிழ்நாட்டில் எம்.பி.க்களுக்கென தனி அலுவலகம் கிடையாது. அரசு கட்டிக் கொடுத்த அலுவலகங்கள் எதுவும் கிடையாது. நான் 7 ஆண்டுகால போராட்டத்துக்குப் பிறகே ஓர் அலுவலகத்தை வாங்கியுள்ளேன்.

ஆகையால், நாடாளுமன்ற உறுப்பினர்களுக்காக, மக்கள் எளிதில் வந்து செல்லும்வகையில், தமிழ்நாடு அரசு அலுவலகம் கட்டித் தர வேண்டும். எங்களுக்கு கார் எதுவும் வேண்டாம்" என்று தெரிவித்தார்.

# பல்லாவரத்தில் தமிழக வெற்றி கழகத்தின் 100 நாள் சாதனை பொதுகூட்டம்



பல்லாவரம் ஆக,24-

செங்கல்பட்டு மாவட்டம் பல்லாவரத்தில் செங்கல்பட்டு வடக்கு மாவட்டம் சார்பில் தமிழக வெற்றி கழகத்தின் 100 நாள் சாதனை வெற்றி கொண்டாட்ட பொதுகூட்டம் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினரும், செங்கல்பட்டு வடக்கு மாவட்ட செயலாளருமான காமாட்சி ஜெயகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. பொதுகூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக உணவு பொருள் வழங்கல் துறை அமைச்சர் வெங்கட்ராமன், மணிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் சரத்குமார், மாநில துனைப் பொதுசெயலாளர் மின்னல்குமார் ஆகியோர் கலந்து கொண்டு 100 நாள் சாதனை குறித்து சிறப்புரையாற்றினர். பொதுகூட்டத்தில் பேசிய சட்டமன்ற உறப்பினர் தமிழகத்தில் அனைத்து தொகுதிகளிலும் உள்ள பிரச்சனைகளை தீர்த்து வைக்கவே தளபதி உள்ளார் எனவும் அமைச்சர் வெங்கட்ராமன் பேசுகையில் மக்கள் பணத்தை கொள்ளை அடித்தவர்களுக்கு வருகின்ற உள்ளாட்சி தேர்தலில் பாடம்புகட்டுவார்கள் எனவும் வளர்ச்சி என்பது பெரிய கட்டிடம் கட்டுவதல்ல அவர்களின் வாழ்க்கை தரம் உயர்ந்தால் மட்டுமே வளர்ச்சி, பதவியில் இருப்பது தலைமை அல்ல பொறுப்பை ஏற்பதும் தலைமை எனவும் எந்த பதவியும், அதிகாரமும் நிரந்தரம் அல்ல மக்களுக்காகவும் நம் அடுத்த தலைமுறை காப்போம் என எம். ஜி.ஆர் அவர்களின் தத்துவ பாடல்பாடினார். இதனை தொடர்ந்து அமைச்சர் சரத்குமார் பேசுகையில் புதியதாக பதவி ஏற்ற மாநில துனைப் பொதுசெயலாளர் மின்னல் குமார் மற்றும் வடக்கு மாவட்ட செயலாளர் காமாட்சி அவர்களுக்கும் வாழ்த்து தெரிவித்தார். முதல் சாதனையாக ஊழலை ஒழித்தது, அதிகபட்ச மதுகடைகளை மூடியது, வீடுகட்டும் திட்டம் என எண்ணெற்ற திட்டங்களை கொண்டு வந்தது த.வெ.க ஆட்சி எனவும் எம்.ஜி.ஆர் மேலாக சூப்பர் எம்.ஜி.ஆர் ஆக தளபதி விளங்குவார் என தெரிவித்து உள்ளாட்சி தேர்தலில் அதிக வாக்கு வித்தியாசத்தில் தமிழக வெற்றிகழகம் வெற்றிபெற வேண்டும் தெரிவித்தார். இதில் மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி மற்றும் ஒன்றியக் கழக நிர்வாகிகள், ஊராட்சி, வார்டு நிர்வாகிகள் மற்றும் பத்திரிக்கை நிருபர்கள் அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் உட்பட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



■ திருப்பத்தூர் மாவட்டம், கந்திலி ஒன்றியத்திற்குட்பட்ட ஆதியூர் பொதிகை பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரியில், பள்ளிக் கல்வித் துறையின் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் கீழ், மாவட்ட அளவில அளவிலான கலைத் திருவிழா போட்டிகளை 2026-27 மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப.,(22.08.2026) அன்று குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். உடன் முதன்மை கல்வி அலுவலர் புண்ணியகோட்டி, ஆசிரியர்கள் உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்கள் உள்ளனர்.



# தேவகோட்டை தே பிரித்தோ மேல்நிலைப்பள்ளியில் 83 வது ஆண்டு விழா









தேவகோட்டை ஆக.24-

சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை தே பிரித்தோ மேல் நிலைப் பள்ளியில் 83 வது ஆண்டு விழா வெகு சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

முதுகலை ஆசிரியர் ஜான் கென்னடி வரவேற்புரை ஆற்றினார். தலைமை ஆசிரியர் சேவியர் ராஜ், உதவி தலைமை ஆசிரியர் எட்வின் ரொசாரியோ ஆகியோர் ஆண்டறிக்கை சமர்ப்பித்தனர்.

இக்கல்வியாண்டில் பணி நிறைவு பெறவுள்ள முதுகலை ஆசிரியர்கள் ஜான்கென்னடி, பவுலியன்ஸ், ஓவிய ஆசிரியர் சேவியர், துப்புரவு பணியாளர் மாரிமுத்து ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

பள்ளியின் முன்னாள் மாணவர்களான தேவகோட்டை செந்தில் மருத்துவமனையின் நிறுவனர் தலைவர் டாக்டர் சிவகுமார், மதுரை கானா ஜோசப் மருத்துவமனையின் மருத்துவர் வெங்கடாஜலபதி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு கல்வி, கலை, விளையாட்டுத் திறன்களில் சாதனை படைத்த மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கிப் பாராட்டினர்.

இயற்கையைப் பாதுகாப்போம் என்ற மையப் பொருளில் மாணவர்களின் கண்கவர் கலை நிகழ்ச்சிகள், தமிழ் & ஆங்கில நாடகங்கள் நடைபெற்றன.

முடிவில் ஆசிரியர் - அலுவலர் சங்கச் செயலர் செல்வ சுதாகர் நன்றி கூறினார்.

முன்னதாக தேவகோட்டை செந்தில் மருத்துவமனையின் நிறுவனர்- தலைவர் பள்ளியின் முன்னாள் மாணவர் டாக்டர் சிவகுமார் அவர்கள் பள்ளி வளாகத்தில் தனது சீரிய முயற்சியில் பல லட்ச ரூபாய் செலவில் அமைத்த பசுமை புல்வெளிகள் நிறைந்த பசுமைத் தோட்டத்தை பள்ளி நிர்வாக அருட்தந்தையர்கள் மற்றும் முனைவர் சிவகாமி சிவகுமார் முன்னிலையில் பள்ளியின் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.



# நடை ரோந்து (Foot Patrolling) மூலம் குற்றங்கள் நடைபெறா வண்ணம் கண்காணிக்கும்

தேனி ஆக.24-

தேனி மாவட்ட காவல்துறையினர். பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் K.S.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# கம்பம் பள்ளத்தாக்கின் கடைமடைக்கு வந்த பெரியாறு அணை நீர் - வேளாண் பணிகள் மும்முரம்

தேனி, ஆக.24-

கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளான லோயர்கேம்ப் முதல் பழனிசெட்டிபட்டி வரை இரண்டு போக நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது. பெரியாறு அணையில் இந்த ஆண்டு தண்ணீர் இல்லாததால் முதல்போகத்துக்கு 68நாள் தாமதமாக கடந்த 8-ம் தேதி நீர் திறக்கப்பட்டது. இந்நீர் கடைமடை வரை செல்லும் வகையில் 17 பிரதான கால்வாய்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதில் இருந்து வாய்க்கால், கிளை வாய்க்கால் வழியே இந்த நீர் ஒவ்வொரு பகுதி வயல்களுக்கும் சென்று கொண்டிருக்கிறது.இந்நிலையில் இந்த நீர் கம்பம் பள்ளத்தாக்கின் கடைசி பகுதியான பழனிசெட்டிபட்டி வயல்களுக்கு வந்தடைந்துள்ளது. தண்ணீர் தொட்டி எதிர்புறத்தில் கம்பம் பள்ளத்தாக்கின் கடைசி கால்வாய் அமைந்துள்ளது. இதில் இருந்து பிரிந்து செல்லும் நீர் பல வயல்களுக்கும் சென்று கொண்டிருக்கிறது.இதனால் இப்பகுதிகளில் உழவு, நாற்றுபாவுதல் உள்ளிட்ட பல்வேறு வேளாண் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன.



# இலாஹி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் விளையாட்டு விழா

மாதவரம், ஆக.24-

மாதவரம் தொகுதி செங்குன்றம் (நாரவாரிக்குப்பம்) பேரூராட்சியில் அமைந்துள்ள இலாஹி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 80வது சுதந்திர தினவிழாவை முன்னிட்டு விளையாட்டு விழா பள்ளி தாளாளர் மௌலவி முனைவர் ஏ.ஹாஜா மொய்னுத்தீன் ஜமாலி தலைமையில் நடைபெற்றது.சிறப்பு அழைப்பாளாராக அல்ஹாஜ் என்.ஆர். சையத் ஆதம் ச. கலந்து கொண்டு பள்ளி மாணவ - மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கி கௌரவித்தார். இதில் மாணவ- மாணவிகள், ஆசிரிய-ஆசிரியைகள், பெற்றோர்கள் திரளாக கலந்துகொண்டனர்.



■ திருப்பத்தூர் மாவட்டம், திருப்பத்தூர் வட்டம், காக்கனாம்பாளையம் கிராமத்தில், வேளாண் விற்பனை மற்றும் வேளாண வணிகத் துறையின் மூலம் திருமதி.கீதா ராமசாமி அவர்களால், ரூ.46.39 இலட்சம் திட்ட மதிப்பீட்டில், ரூ.16.10 இலட்சம் மானியத்தில், சிறுதானிய மதிப்புக் கூட்டல் அலகு அமைக்கப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சியர் கு.ரவிகுமார்,இ.ஆ.ப., (22.08.2026) அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறையின் வேளாண் அலுவலர்கள் (வேளாண் வணிகம்) லதா மற்றும் முருகதாஸ் ஆகியோர் உள்ளனர்.

## நீட் தேர்வு மற்றும் உயர் ஜாதியினருக்கான இட ஒதுக்கீட்டை எதிர்த்து

# இருசக்கர வாகன பரப்புரை ஆறாவது குழு தேனி பழைய பேருந்து நிலையம் வந்தடைந்தது

தேனி. ஆக.24

திராவிடர் கழக மாவட்ட செயலாளர் மணிகண்டன் தலைமையில் விசிக மாவட்ட செயலாளர் சுசி தமிழ் பாண்டியன் மாவட்ட செயலாளர் முத்துசாமி இளைஞரணி செயலாளர் ரா வெங்கடேசன் முன்னிலையில் இருசக்கர பரப்புரை பயண ஒருங்கிணைப்பாளர் செந்தூர் பாண்டியன் ஒருங்கிணைப்பில் மாநில துணை செயலாளர் நர்மதா நீட் தேர்வு பற்றியும் உயர்சாதியினருக்கான இட ஒதுக்கீடு பற்றியும் பரப்புரை செய்தார்கள். இந்த நிகழ்வில்

திமுக மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் கிங், விஜய குமார், விசிக மாவட்ட பொருளாளர் அன்பு வடிவேல், ஆதித்தமிழர் பேரவை மாவட்டசெயலாளர் நீலக்கணலன் ,

மாநில செய்தி தொடர்பாளர் ஆ பே சுரேஷ், எஸ் டி பி ஐ கட்சி மாவட்ட தலைவர் அபூபக்கர் சித்திக், நகர செயலாளர் உமர், தமிழ் தேச மார்க்சிய கழக பொதுச் செயலாளர்

தோழர் மதியவன், இரும்பொறை தமிழ் தேச மார்க்சிய கழக வழக்கறிஞர் ராவணன்,

தொழிலாளர் சீரமைப்பு இயக்கம் மா சேகர், Dyfi மாவட்ட செயலாளர் நாகராஜ், தமிழ் புலிகள் கட்சி மேற்கு மாவட்ட செயலாளர் வைரமுத்து, அமைப்புச் செயலாளர் சௌந்தரபாண்டி,

புரட்சிகர சோசியலிஸ்ட் கட்சி மாவட்ட செயலாளர் கிருஷ்ணமூர்த்தி, திராவிட புரட்சி கழக அமைப்பாளர் தலித்ராயன், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் தேவராஜன் ,

தோழர் பரிமளக்கண்ணன், உள்பட தோழமை இயக்க தோழர்கள் திரளாக கலந்து கொண்டனர் திராவிடர் கழக ஒன்றிய செயலாளர் சென்ராயன் நன்றி கூறினார்.

# நீலகிரி மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தை ஈரோட்டுடன் இணைக்கக் கூடாது : கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் கோரிக்கை

நீலகிரி, ஆக.24-

நீலகிரி மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தை ஈரோடு மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்துடன் இணைக்கும் முன்மொழிவை கைவிட்டு, நீலகிரி மாவட்டத்தில் தனித்த நுகர்வோர் குறைதீர் ஆணையம் தொடர்ந்து செயல்பட நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் சார்பில் தமிழ்நாடு அரசுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மையத்தின் செயலாளர் சு. சிவசுப்பிரமணியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

நீலகிரி மாவட்டம் மலைப்பகுதியாக இருப்பதால், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் நுகர்வோர் குறைதீர் ஆணையத்தை அணுகுவதற்கே போக்குவரத்து மற்றும் தொலைவு தொடர்பான சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். இந்நிலையில், மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தை ஈரோடு மாவட்டத்துடன் இணைத்தால், நுகர்வோர் வழக்குகளுக்காக நீண்ட தூரம் பயணம் செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

குறிப்பாக பழங்குடியினர், தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள், விவசாயிகள், முதியோர், பெண்கள் மற்றும் பொருளாதார ரீதியாக பின்தங்கியவர்கள் இதனால் அதிகம் பாதிக்கப்படக்கூடும். பயணச் செலவு, உணவு, தங்குமிடம் மற்றும் வேலை இழப்பு போன்ற கூடுதல் சுமைகளும் ஏற்படும்.

ஒரு மாவட்டத்தில் வழக்குகளின் எண்ணிக்கை குறைவாக இருப்பதை மட்டும் அடிப்படையாகக் கொண்டு நுகர்வோர் குறைதீர் ஆணையத்தை வேறு மாவட்டத்துடன் இணைப்பது சரியான அணுகுமுறையாக இருக்காது. மாவட்டத்தின் புவியியல் அமைப்பு, மக்கள் தொகை, போக்குவரத்து வசதி மற்றும் நுகர்வோர் நீதியை அணுகுவதற்கான வாய்ப்பு ஆகியவற்றையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

எனவே, நீலகிரி மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தை ஈரோடு மாவட்டத்துடன் இணைக்கும் முன்மொழிவை கைவிட்டு, நீலகிரியில் தனித்த ஆணையம் தொடர்ந்து செயல்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

மேலும், வழக்குகளின் எண்ணிக்கை குறைவாக இருந்தால், நுகர்வோர் விழிப்புணர்வு முகாம்கள், சட்ட விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் முகாம் முறையிலான குறைதீர் நடவடிக்கைகளை அதிகரித்து, பொதுமக்கள் ஆணையத்தை அதிகம் பயன்படுத்தும் வகையில் நடவடிக்கை எடுக்கலாம்.

நுகர்வோர் அமைப்புகள் மற்றும் பொதுமக்களின் கருத்துகளைப் பெற்று, அதன் பின்னரே இதுபோன்ற நிர்வாக முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

"நுகர்வோர் நீதி மக்களுக்கு அருகில் கொண்டுவரப்பட வேண்டும் நுகர்வோருக்கு நியாயமான நிதி கிடைக்க வேண்டும் என்பதை அடிப்படையாகக் கொண்டு நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்திற்கு சிறப்பு இயல்பை தக்க வைக்கும் வகையில். நீலகிரி மாவட்டத்திற்கான தனித்த நுகர்வோர் குறைதீர் ஆணையம் தொடர்ந்து செயல்படுவது அவசியம்" என சு. சிவசுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161